**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003


முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர், தேதி: 04.10.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவோருக்கான மத்திய அரசின் மானிய அறிவிப்பு**

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் Rashtriya Krishi Vikas Yojana - Remunerative Approaches for Agriculture and Allied sectors Rejuvenation – Regional Agribusiness Incubators (RKVY-RAFTAAR-R-ABI) எனும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக இயக்குனரகம், தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் 2019-ல் இருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் மூலம் மானியம் வழங்கப்படுகின்றது.

(i) புதிய வேளாண் தொழில் முனைவோர்களுக்கான (AOP) ரூ.5 இலட்சம் வரையிலான மானியத் தொகை

(ii) வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான (SAIP) ரூ.25 இலட்சம் வரையிலான மானியத் தொகை

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் MoA& FW-RKVY - திட்டத்தின் கீழ் 2019 முதல் 2022 வரை ரூபாய் 8.10 கோடி மானியம் தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் 70 தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் (RKVY-RAFTAAR-R-ABI) கீழ் தேர்ந்தெடுக்கபட்ட புத்தொழில் முனைவோர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் வெ.கீதாலட்சுமி மானியங்களை வழங்கினார். அவர் தனது உரையில் இளம் பட்டதாரிகளை வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துவது பெரிய சவாலாக உள்ளது. இது போன்ற மானியங்கள், இளைஞர்களை வேளாண் சார்ந்த கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் வேளாண் தொழில் மேம்படுத்துவதற்கும் ஊக்கம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ஏ.சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார் மற்றும் தொழில் நுட்ப வணிக காப்பக செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் நன்றியுரை வழங்கினார். மேலும் இவ்விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கோவை திரு.ஷஃபிக் அகமத்,, வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை) திரு.பெருமாள்சாமி மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தொழில் முனைவோர்கள் தங்கள் மானியத்தை தயாரிப்பு பொருட்களைமேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**